பேரூராட்சி அலுவலகம்,
மேல்பட்டாம்பாக்கம்.

ந.க.எண் : **156/2007** நாள் : 22–06–2009.

# ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

1. மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட இதன் கீழ் இணைப்பில் கண்ட வேலைகளை செய்து முடிப்பதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **07.07.2009** செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் **3.00** மணி வரையில் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளிகள் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் எந்த திட்டத்திற்கு எந்த வேலைகளுக்கு ஒப்பந்த புள்ளிகள் என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

3. ஒவ்வொரு வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி நமூனாவிற்கான தொகையை இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு , பேரூராட்சி அலுவலகத்தில் 06–07–2009 மாலை **5–00** மணிக்குள் அலுவலக நேரத்தில் ரொக்கமாக செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. தேசீய பத்திரங்கள் இணைக்கப்பட்டால் அவைகளை ஒப்பந்ததாரர்கள் செயல் அலுவலர் பேரூராட்சி அலுவலகம் , மேல்பட்டாம்பாக்கம் அவர்களின் பெயருக்கு அஞ்சல் அலுவலகத்தில் அடமானம் செய்து கொடுக்கப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாமல் இணைக்கப்படும் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பத்திரங்கள் 01–06–2009 –க்கு பின் வழங்கப்பட்டவையாக இருக்க வேண்டும்

5. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த புள்ளிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் இலாகா சம்பந்தப்பட்ட சட்டத் திட்டங்களுக்கு கட்டுப்பட்டு வேலையினை செய்து முடிப்பதாக ரூ.20– மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும்.

6. ஒப்பந்தபுள்ளிகள் ஷெட்யூல் அடிப்படையில் கோரப்படுகிறது.

7. ஒப்பந்தபுள்ளி நமூனாக்கள் பேரூராட்சி அலுவலகத்தில் 07–07–2009 அன்று பிற்பகல் **3.00** மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். வேலைக்கான டேவணித்தொகையினை 06–07–2009 பகல் **12.00** மணிக்குள் செலுத்தி இரசீது பெற்று ஒப்பந்தபுள்ளியுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

8. பெறப்பட்ட ஷெட்யூல் டெண்டர் விண்ணப்பங்கள் **07–07–2009** அன்று பிற்பகல் **3.30** மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரால் திறக்கப்படும்.

9. ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலையை ஒப்பந்ததாரரே செய்து முடிக்க வேண்டும்.

10. காலம் தவறி வரும் ஒப்பந்த புள்ளிகள் மற்றும் டேவணித்தொகை செலுத்திய இரசீது இணைக்கப் படாத ஒப்பந்தபுள்ளிகள் நிராகரிக்கப்படும்.

11. ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு கிடைத்தவுடன் 7 தினங்களுக்குள் ஒப்பந்தபத்திரம் எழுதிக்கொடுத்து வேலையை துவங்கி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கால கெடுவிற்குள் செய்து முடிக்க வேண்டும். தவறினால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் முன் அறிவிப்பின்றி வேலையினை இரத்து செய்து உத்தரவு வழங்கப்படும். அதன்பின் மீதமுள்ள வேலையை செய்து முடிக்க ஏற்படும் கூடுதல் செலவினம் மற்றும் அதற்குண்டான சகல நஷ்டங்களுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவாளியாக்கப்படுவார்.

12. மூடி முத்திரையிடப்படாத ஒப்பந்தபுள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13. வேலைகளுக்கான டேவணித்தொகை 3% செலுத்த வேண்டும். 1% டெண்டர் கோரும்போது செலுத்த வேண்டும். மீதமுள்ள 2% வேலைக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

14 வருமான வரி பிடித்தம் 2%, வருமான வரிமேல் மிகு வரி 12 1/2% (IT–யில் ), விற்பனை வரி 2% , விற்பனைவரி மேல் மிகு வரி (ST-யில்) 5% பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய சந்தா தொகையாக பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் 0.3% – ம் வேலைக்கான உத்திரவு வழங்கப்படும் போது வங்கி வரைவோலையாக எடுத்து வழங்க வேண்டும் .

15. ஒப்பந்தத்திற்காக செலுத்திய வைப்புத்தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் திரும்ப வழங்கப்படும்.

16. பணவரம்பு உள்ளவர்கள் மட்டுமே டேவணித்தொகையை செலுத்தி ஒப்பந்தபுள்ளிகள் கோர வேண்டும்.

17. இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

18. திட்ட வேலைக்கு தேவையான **சிமெண்ட், ஸ்டீல் , தார்** போன்ற பொருட்கள் இலாகா மூலம் வழங்கப்படமாட்டாது . ஒப்பந்ததாரர்கள் தமது சொந்த பொறுப்பிலேயே வாங்கி கொள்ள வேண்டும் .

19. இரும்பு , சிமெண்ட் பொருட்கள் ஐ.எஸ்.ஐ தரம் உள்ளவைகளா என்று ஆய்வகங்களில் பரிசோதனை செய்து ஒப்பந்ததாரர்களால் வாங்கப்பட வேண்டும். அல்லது அரசு அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை ஆய்வகங்களில் தங்கள் செலவிலேயே பரிசோதனை செய்து தரச்சான்றிதழ்களை வாங்கி ஒப்பந்ததாரர்கள் பேரூராட்சி பொறியாளர்களிடம் கொடுக்க வேண்டும் .

20. வேலை துவங்கும் முன் பணியின் நிலை , பணி நடைபெறும் சமயம் உள்ள நிலை மற்றும் பணி முடிவுற்ற பின்னர் உள்ள நிலைகளுக்கு புகைப்படம் இரண்டு நகல்கள் (CDயுடன்) எடுத்து ஒப்பந்ததாரர் பொறுப்பில் வழங்கப்பட வேண்டும் .

21. ஒப்பந்தபுள்ளிக்கான தேதியை ஒத்திவைக்க செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

22. வேலை துவங்கும் முன் திட்டத்தின் பெயர் , வேலையின் பெயர் மற்றும் ஆண்டு ,மதிப்பீட்டுத் தொகை, ஒப்பந்ததாரர் பெயர், வேலை ஆரம்பிக்கப்பட்ட நாள், வேலை முடிவுறும் நாள் முதலியன அடங்கிய பெயர் பலகையினை ஒப்பந்ததாரர் தன் பொறுப்பில் வேலை நடைபெறும் இடத்தில் அமைக்க வேண்டும் .

**<u>ஒப்பந்தபுள்ளி கோரும் வேலையின் விபரம்</u>**

**<u>பிற்படுத்தப்பட்ட பகுதிக்கான மான்ய நிதி(BRGF) 2007-2008</u>**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | டெண்டர் ஷெட்யூல் படிவத் தொகை ரூ . | முன் வைப்புத் தொகை ரூ . | பணி முடிக்கப் பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | வெங்கடகிருஷ்ணா நகர் தார்சாலை அமைத்தல். 215 மீ | 1,70,000/– | 780/– | 1700/– | 60 நாட்கள் |
| 2 | மார்ச்கெட் தெருவில் நவீன கட்டண கழிப்பிடம் கட்டுதல் | 2,50,000/– | 780/– | 2500/– | 90 நாட்கள் |
| 3 | வி.வி.ஆர். நகர் தார்சாலை அமைத்தல் 215 மீ. | 2,00,000/– | 780/– | 2000/– | 60 நாட்கள் |
| | **கூடுதல்** | **6,20,000/–** | | | |

**(ஒ.ம்) அ.ஜோதிமாணிக்கம்**
செயல் அலுவலர்,
மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி.

**பெறுதல் :**
மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியில் பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்ததாரர்கள் அனைவருக்கும்.

**நகல் :**

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம், கடலூர் அவர்களக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) கடலூர், அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவிப்பொறியாளர், திட்டக்குடி பேரூராட்சி.
4. மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.
5. செயல் அலவலர், பேரூராட்சி அலுவலகம் வடலூர்/குறிஞ்சிப்பாடி/கெங்கைகொண்டான்/ தொரப்பாடி விளம்பரப் பலகையில் பிரசுரிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
6. அலுவலக விளம்பர பலகைக்கு.
7. கோப்புக்கு.